## விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் - 2014

விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1992 இன் 09 ஆம் இலக்க விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் தயாரிக்கும் அடிப்படையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மாதிரியின் பிரகாரம் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 20,500 தொகையான உதவிக் கொடுப்பனவுகளுக்குரித்தாக வங்கியால் திருப்பியனுப்பிய காசோலைகள், செலுத்தப்பட்ட மாணவர் உதவிக் கணக்கிலிருந்து கழித்து செலுத்த வேண்டியதாக காண்பிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் மூலம் இலங்கை விழிப்புலனற்றவர்களுக்கான மக்கள் சம்மேளனத்திற்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 293,959 கூட்டுத்தொகையான பணம் கிடைக்கப்பெற்றமைக்கான பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிச் செயலாற்றல் கூற்றின் படி 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 285,389 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 27,189 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 312,577 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் ரூபா 21,057 ஆல் அதிகரித்த போதிலும், நிறுவகத்தின் செலவினம் ரூபா 317,999

ஆல் அதிகரித்தமை மற்றும் விழிப்புலனற்றவர்களுக்கான பெண்கள் நலன்புரி நிலையத்தின் நட்டம் ரூபா 15,635 ஆல் அதிகரித்தமை இதற்கான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விழிப்புலனற்றோருக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்காத வகையில் கட்டான நயனாலோக கிராமத்தில் வீடுகளை திருத்தியமைப்பதற்காக கட்டான பிரதேச செயலாளருக்கு ரூபா 500,000 வழங்கப்பட்டு நானாவித செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2015 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையில் அதில் ரூபா 28,500 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1992 இன் 9 ஆம் இலக்க விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் பிரதான நோக்கங்களாக குறிப்பிடப்பட்ட கீழே காண்பிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- (i) விழிப்புலனற்றோருக்காக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு சுயதொழிலுக்காக நிதியுதவியும் வழிகாட்டல்களும் வழங்கப்படல்.
- (ii) சுயவேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
- (iii) விழிப்புலனற்றோருக்கான நலன்புரிக்கான உத்திதேசத் திட்டங்களை செயற்படுத்தல்.
- (iv) சம உரிமைகள் மற்றும் சம சந்தர்ப்பங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு விழிப்புலனற்றவர்ளை தவிர்க்கும் நிலைமையை அகற்ற செயற்படுதல்.

(இ) 2014 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கல்வி மற்றும் கலாசார உதவிகளாக 250 மாணவர்களுக்கு ரூபா 1,500,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், உள்ளபடியாக 199 மாணவர்களுக்காக ரூபா 1,380,324 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டின் மூலம் இத்தொகை 110,060 ஆல் குறைக்கப்பட்டு ரூபா 1,390,000 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 51 ஆல் குறைடைந்திருந்தது.

(ஈ) 225 கண் வில்லைகளை வழங்குவதற்கும் மருத்துவ சிகிச்சைகளுக்கும் ரூபா 1,190,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2014 இன் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 123 கண் வில்லைகளும் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு நபருக்கு ரூபா 20,000 படி வழங்குவதற்காக ரூபா 1,272,973 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் கண்வில்லை நலனாளிகளின் எண்ணிக்கை 102 ஆல் குறைவடைந்திருந்ததுடன், அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் விழிப்புலனற்றோருக்கான பெண்கள் நலன்புரி நிலையத்தின் 08 பேருக்கு பயிற்சியளிப்பதற்காக ரூபா 239,500 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக 4 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டு ரூபா 233,929 செலவிடப்பட்டிருந்தமையால் பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதமாகவும் நிதிச் செயல்முன்னேற்றம் 98 சதவீதமாகவும் இருந்ததுடன், எதிர்பார்த்த பயிற்சியாளர்களின் எண்ணிக்கைக்கு பயிற்சியளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உயர்தர மாணவர்களுக்காக மாதாந்த உதவிக் கொடுப்பனவின் போது 07 மாணவர்களுக்காக மாணவர் உதவித் தொகை 01 மாதத்திலிருந்து 09 மாத காலவீச்சில் தாமதித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 1,000 தொகையான மாதாந்த மாணவர் உதவித்தொகை பெறும் 14 மாணவ / மாணவிகளுக்கு மாணவர் உதவிக் கொடுப்பனவுகள் செலுத்துவதில் 03 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை தாமதமாகியிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 திசெம்பர் 18 ஆம் திகதி திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தஞ் செய்யப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டில் வருமான செலவினங்களுக்கும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கும் இடையே 19 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 18 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட மதிப்பீட்டில் பின்வரும் செலவினங்களுக்காக ஆரம்ப மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் 7 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை திருத்தஞ்செய்யப்பட்டிருந்த போதும் அதற்கு காரணமான விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், ஆரம்ப மதிப்பீடு நிதியாண்டு முடிவடைவதற்கு 13 நாட்கள் இருக்கும் போது அதாவது 2014 திசெம்பர் 18 ஆம் திகதி திருத்தஞ் செய்யப்பட்டிருந்தமையால் பாதீடு தயாரித்தலில் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படா திருந்தமை அவதானிக்கப்பட்டது.

| செலவின விபரம் | | மதிப்பிடப்பட்ட தொகை | திருத்திய மதிப்பீடு | செலவினக் குறைவு | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| (i) | தொழிற் பயிற்சியளித்தல் | 200,000 | 160,500 | 39,500 | 20 |
| (ii) | கல்வி, கலாசார உதவி | 1,500,000 | 1,390,000 | 110,000 | 7 |
| (iii) | புனரமைப்பு உதவிகள் | 1,300,000 | 1,050,000 | 250,000 | 19 |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) மாணவர் உதவுதொகைகள் கொடுப்பனவு

(ஆ) விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

(இ) புனர்வாழ்வு உதவிகள் கொடுப்பனவு

(ஈ) கணக்கீடு